IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT MUNSIF,
THIRUMANGALAM.
O.S.No.257/2010
DEPOSITION OF WITNESS

ஆரம்ப நேரம்: 12.35p.m.

பி.வா.சா.1 சாட்சி இராஜம்மாள் க.பெ.பொன்னுச்சாமி

**Solemnly affirmed and sworn by Thiru.E.Manikandan, B.A.,B.L, Principal District Munsif (FAC) on 02.04.2026 in accordance with the provisions of Act XX141.**

வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:

1. வழக்கு விபரங்கள் ஞாபகத்தில் உள்ளதா என்றால் உள்ளது. இவ்வழக்கானது மேலக்கோட்டை கிராமம் சர்வே எண் 212/6Bல் உள்ள 77 1/2 செண்டுக்கு நடக்கிறது என்றால் 77 1/2 செண்டு அல்ல 53 1/2 செண்டு ஆகும். வாதிகள் அவர்களது வழக்குப்படி தாவாச் சொத்து 77 1/2 செண்டு என்று கூறுகிறார்கள் என்றால் சரிதான். வாதிகள் தரப்பில் என்ன ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளார்கள் என்ற விபரத்தை தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன்.

2. 1ம்வாதியின் தந்தை பெயர் பெருமாள் கவுண்டர் என்றால் எனக்கு தெரியாது. மேற்படி பெருமாள் கவுண்டரின் தந்தை பெயர் முத்துக்குமார் கவுண்டர் என்றாலும் எனக்கு தெரியாது. எனக்கு தெரிந்த வரை 1ம்வாதியின் தந்தை பெயர் என்ன என்றால் எனக்கு தெரியாது, நான் விசாரிக்கவும் இல்லை.

3. கொடிவழி ஜாபிதா வா.சா.ஆ.1ல் உள்ள விபரங்களை பற்றி எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. வா.சா.ஆ.2 கணினி சிட்டாவை நான் தெரிந்து கொண்டேனா என்றால் எனக்கு தெரியாது. வருவாய்துறை

அலுவலகத்தில் வழக்குச் சொத்திற்கு ஏற்பட்டிருந்த பட்டாவினை மாற்றி எனது பெயருக்கு நான் கொடுத்த மனுவில் யார்பெயரில் ஏற்பட்ட பட்டாவை மாற்ற மனுக்கொடுத்தேன் என்றால் பெருமாள் கவுண்டர் என்பவர் பெயரில் ஏற்பட்ட பட்டாவை மாற்ற மனுக்கொடுத்தேன்.

4. மேற்படி மனுவில் கூறியுள்ள பெருமாள் கவுண்டரின் தந்தை பெயர் என்ன என்றால் அவரது பெயரும் பெருமாள் கவுண்டர் ஆகும். பெருமாள் கவுண்டரின் மகன் பெருமாள் கவுண்டர் என்பது 1ம்வாதி பால்ச்சாமியின் தந்தை பெயரா என்றால் இல்லை. பெருமாள் கவுண்டரின் மகன் பெருமாள் கவுண்டர் என்பவர் யார் என்று என்னால் குறிப்பிடமுடியுமா என்றால் மெர்சி அம்மாளின் கணவர் பெருமாள் கவுண்டர் ஆவார்.

5. மாவட்ட வருவாய் அலுவலர் அலுவலகத்தில் வழக்குச் சொத்திற்கு நிலஉடமை மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ் பட்டா தவறுதலாக வழங்கப்பட்டது என்று மனுகொடுத்திருந்தேன் என்றால் சரிதான். மேற்படி மனுவில் மெர்சி அம்மாளின் கணவர் பெருமாள் கவுண்டர் மீதுதான் தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். மேற்படி மனுவில் விசாரணைக்கு எதிர்மனுதாரராக யார் வந்தார் என்றால் இவ்வழக்கின் 1ம்வாதியான பால்ச்சாமி கவுண்டர் ஆஜரானார்.

6. அவ்வாறு 1ம்வாதி மேற்படி மனுவில் ஆஜராகியபோது மாவட்ட வருவாய் அலுவலரிடம் 1ம்வாதியை எதிர்த்து மனு தாக்கல் செய்யவில்லை என்றும், மெர்சி அம்மாளின் கணவர் பெருமாள் கவுண்டர் என்பவர் மீதுதான் மனு தாக்கல் செய்ததாக நான் குறிப்பிட்டேனா என்றால் அவர்கள் கேட்கவும் இல்லை, நான் கூறவும் இல்லை. மேற்படி விபரங்களை

இவ்வழக்கின் எதிர்வழக்குரையில் கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன்.

7. நான் குறிப்பிடும் மெர்சி அம்மாளின் கணவர் பெருமாள் கவுண்டர் உயிருடன் உள்ளாரா என்றால் இல்லை, எப்போது இறந்தார் என்றால் 1992 என்று சொன்னார்கள். மதுரை மாவட்ட வருவாய் அலுவலரிடம் நான் மனுசெய்த போது நான் குறிப்பிடும் மெர்சி அம்மாளின் கணவர் பெருமாள் கவுண்டர் உயிருடன் இல்லை. வழக்குச் சொத்து உண்மையில் 1ம்வாதியின் தந்தை பெருமாள் கவுண்டருக்கு பாத்தியப்பட்டது என்றும், நான் குறிப்பிடும் மெர்சி அம்மாள் கணவர் பெருமாள் கவுண்டர் என்பவருக்கு எந்த காலத்திலும் பாத்தியப்பட்டது அல்ல என்றாலும், தவறான புரிதலின்பேரில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

8. வழக்குச் சொத்து ஆதியில் 1ம்வாதியின் தாத்தா முத்துக்குமார் கவுண்டரின் மகன் பெருமாள் கவுண்டருக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றால் சரியல்ல. மேற்படி பெருமாள் கவுண்டருக்கு பிறகு அவரது வாரிசுகளுக்கு இடையே ஏற்பட்ட பாகப்பிரிவினையின்போது 1ம்வாதி பாலுச்சாமிக்கு வழக்குச் சொத்து கிடைக்கப்பெற்றது என்றால் சரியல்ல.

9. எங்களது வழக்குப்படி வழக்குச் சொத்து ஆதியில் யாருக்கு பாத்தியப்பட்டது என்றால் முத்துக்குமார கவுண்டரின் மகன் கூடாண்டி கவுண்டருக்கும், பொன்னு கவுண்டரின் மகன் சூரப்பக்கவுண்டருக்கும் பாத்தியப்பட்டது. இவர்கள் இருவருக்கும் எவ்வளவு விஸ்தீரணம் பாத்தியப்பட்டது என்றால் 1 ஏக்கர் 6செண்டு ஆகும். மேற்படி இருவர் பெயரில் பாத்தியப்பட்டது என்பதற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் அ–பதிவேடு தாக்கல் செய்துள்ளேன். மேற்படி அ–பதிவேடு

மொத்த விஸ்தீரணத்திற்கா, அல்லது வழக்குச்சொத்திற்கா என்றால் மொத்த விஸ்தீரணத்திற்கு ஆகும்.

10. நான் குறிப்பிடும் பொன்னு கவுண்டரின் மகன் சூரப்பக்கவுண்டருக்கு எத்தனை பிள்ளைகள் என்றால் எனக்கு தெரியாது. முத்துக்கவுண்டரின் மகன் கூடாண்டி கவுண்டர் என்பது கிடையாது என்றும் அது பெருமாள் கவுண்டர் என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.2 ஆவணத்தில் உண்மை விபரங்கள் மறைத்து தவறாக உறவுமுறைகளை குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல.

11. பொன்னுகவுண்டர் மகன் சூரப்பக் கவுண்டருக்கும், முத்துக்குமார கவுண்டரின் மகன் கூடாண்டி கவுண்டருக்கும் பாகம் ஏற்பட்டதா என்றால் ஏற்பட்டது, எப்போது ஏற்பட்டது என்று ஞாபகம் இல்லை. மேற்படி பாகப்பிரிவினை பத்திரம் எழுத்து மூலமாக ஏற்பட்டதா என்றால் வாய்கிரலாக ஏற்பட்டது. வாய்கிரால் பாகப்பிரிவினையில் யாருக்கு என்னென்ன பகுதி ஒதுக்கப்பட்டது என்றால் சூரப்பக்கவுண்டருக்கு வடபுறம் 53 செண்டும், தென்புறம் கூடாண்டி கவுண்டருக்கு 53 செண்டும் ஒதுக்கப்பட்டது.

12. மேற்படி இருவரது பெயரிலும் தனித்தனியாக பட்டா ஏற்பட்டதா என்றால் ஏற்பட்டது. வடபுறம் 53 செண்டு உட்பிரிவுப்படி 212/6A எனவும் தென்புறம் 53 செண்டு 212/6B என பிரிந்தது. இருவரது பெயரிலும் உட்பிரிவு மற்றும் தனிப்பட்டா வழங்கப்படவில்லை என்றால் சரியல்ல. வழக்குச் சொத்தின் பழைய பைமாஸ் நம்பர் தெரியுமா என்றால் தெரியாது.

13. நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.3 ஆவணத்தில் வழக்குச் சொத்து கட்டுப்படவில்லை என்றால் சரியல்ல. கூடாண்டி கவுண்டரின் மகன் பால்ச்சாமி கவுண்டருக்கு எத்தனை பிள்ளைகள் என்றால் ராஜ், மற்றும் பொன்னுச்சாமி என்ற இரண்டு பிள்ளைகள் ஆவார்கள் அவர்கள் உடன்பிறந்த சகோதரிகள் உள்ளார்களா என்றால் இல்லை.

14. மேற்படி பால்ச்சாமி கவுண்டர் என்பவரின் ஒருமகனான பொன்னுச்சாமி என்பவர் எனது கணவர் ஆவார். எனது கணவரின் தந்தை பால்ச்சாமி கவுண்டர் பெயரில் வழக்குச் சொத்திற்கு பட்டா ஏற்படவில்லை என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.6 ல் எனக்கு கிரையம் கொடுத்த நபர்களின் பெயரில் பட்டாஏற்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் எனது கணவர் மற்றும் ராஜ் மற்றும் அவரது மகன் பாண்டி ஆகியோர் பெயரில் வழக்குச் சொத்திற்கு பட்டா ஏற்படவில்லை.

15. எனது கணவரின் சகோதரர் ராஜ் என்பவருக்கு சேகர் என்ற ஒரு மகன் உள்ளார் என்றால் சரிதான். மேற்படி சேகர் பி.வா.சா.ஆ.6ல் கையொப்பம் செய்யவில்லை என்றால் சரிதான், சேகர் என்பவர் அவரது உரிமையை அவரது தந்தைக்கு விடுதலை செய்து கொடுத்துவிட்டார். அதனால் அவர் பி.வா.சா.ஆ.6ல் கையொப்பம் செய்யவில்லை. சேகர் என்பவர் அவரது தந்தைக்கு பாகப்பாத்திய விடுதலை கொடுத்தது சம்மந்தமாக பி.வா.சா.ஆ.6ல் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் குறிப்பிடப்பட்டுள்ளது.

16. சேகர் அவரது உரிமையை பதிவு பாகப்பாத்திய விடுதலை மூலம் அவரது தந்தைக்கு கொடுத்துள்ளார். மேற்படி ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் செய்துள்ளேன். சேகர் என்பவர் அவரது தந்தைக்கு பாகப்பாத்திய விடுதலை கொடுத்துவிட்டார் என்று வழக்கிற்காக

தவறாக குறிப்பிடுகிறேன் என்றால் சரியல்ல. வழக்குச் சொத்து எனது மாமனாருக்கோ, அவரது வழிவழி பாகஸ்தியர்களுக்கோ உரிமையானது அல்ல என்றால் சரியல்ல.

( வாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.)

**மறுவிசாரணை: இல்லை.**

முடிவடையும் நேரம்:1.15p.m.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை
தட்டச்சு செய்து அவருக்கு படித்துக்காட்டி
அவர் சரியென்று ஒப்புக்கொண்டு இதில்
கையொப்பமிட்டார்.

ESWARAN MANIKANDAN
Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2026.04.02 18:26:26 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (FAC),
திருமங்கலம்.